| | வலயக்கல்விஅலுவலகம் - யாழ்ப்பாணம் | |
|---|---|---|
| | இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018 | |
| தரம் - 06 | புவியியல் | நேரம் :- 2 மணித்தியாலம் |

சுட்டெண் :- ..............................

## பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) உமது பாடசாலை அமைந்துள்ள மிகப் பெரிய நிர்வாகப் பிரிவு
1) கிராம உத்தியோகத்தர் பிரிவு    2) மாவட்டம்
3) மாகாணம்    4) பிரதேச செயலர் பிரிவு

02) கிழக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் அமைந்துள்ள திசை.
1) தென்மேற்கு    2) தென்கிழக்கு    3) வடகிழக்கு    4) வடமேற்கு.

03) செல்சியஸ் அலகில் அளவிடப்படும் வானிலை மூலகம்.
1) ஈரப்பதன்    2) வெப்பநிலை    3) மழைவீழ்ச்சி 4) படிவு வீழ்ச்சி.

04) அதிவேகமாக வீசும் காற்று.
1) மென்காற்று    2) புயல்    3) தென்றல்    4) மாருதம்

05) பின்வருவனவற்றுள் இயற்கையாக உருவாகிய அம்சம்.
1) சமவெளிகள்    2) கட்டடங்கள்    3) தோட்டநிலம்    4) போக்குவரத்து வீதி

06) இலங்கையில் பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள திணைக்களம்.
1) நில அளவைத் திணைக்களம்    2) வளிமண்டலவியல் திணைக்களம்.
3) கல்வி வெளியீட்டுத் திணைக்களம்    4) விவசாயத் திணைக்களம்.

07) தாவர வகைகளைப் பயிரிடத் தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான விடயம்.
1) தாவரங்களின் அழகு
2) தாவரங்களின் பயன்தரும் காலம்.
3) தாவரங்களைப் பராமரிக்கும் செலவு
4) சூழலுக்கும், மனிதனின் சுகாதாரத்திற்கும் கிடைக்கும் நன்மை.

08) மண்ணை இளகச் செய்வதற்கும், செழிப்படையச் செய்வதற்கும் பங்களிக்கும் உயிரினம்.
1) மண்புழு    2) அகளான்    3) கறையான்    4) பெருச்சாளி.

09) பிளேக் நோயைப் பரப்பும் விலங்கு.
1) நுளம்பு    2) இலையான்    3) வௌவால்    4) எலி.

10) இஸ்லாம் மதத்தவர் கொண்டாடும் பண்டிகைகள்
1) வெசாக், நோன்புப் பெருநாள்    2) ஆடிப்பிறப்பு, தைப்பொங்கல்
3) ரம்ழான், மீலாதுன் நபிகள் பிறந்த தினம்    4) தீபாவளி, எசலபெரஹர.

11) நீர்த்தேக்கம் மற்றும் குளம் போன்ற நீர்நிலைகளின் அண்மையில் வாழும் மக்களின் பிரதான தொழில்.

1) விவசாயம் 2) தென்னைச் செய்கை 3) நெசவுத் தொழில் 4) கைத்தொழில்.

12) இலங்கை அரசினால் இலவசமாக வழங்கப்படும் சேவைகள்.

1) போக்குவரத்துச் சேவை, மின்சார சேவை.
2) கல்வி மற்றும், வைத்திய சேவை.
3) தொடர்பாடல் மற்றும் போக்குவரத்துச் சேவை.
4) தபால் சேவை, நீர் வழங்கல் சேவை.

13) வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்று.

1) மலைச்சரிவுகளில் படிக்கட்டு முறைப் பயிர்ச்செய்கை.
2) நதிகளில் வரையறையின்றி மண்ணகழ்தல்.
3) காடுகளை உருவாக்குதல்.
4) குளங்களை ஆழமாக்குதல்.

14) நாம் உபயோகிக்கும் அனைத்துச் சக்தி வளங்களினதும் அடிப்படைச் சக்தி மூலம்.

1) நீர் மின்சக்தி 2) சூரியன் 3) நிலநெய் 4) இயற்கை வாயு.

15) கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பதிலீட்டுச் சக்தி வளம்

1) இயற்கை வாயு 2) அனல் மின்சக்தி
3) அணுசக்தி 4) உயிரியல் வாயு.

16) பாதுகாப்புடன் இலகுவாகவும், விரைவாகவும் சமைக்க உதவுகின்ற அடுப்பு வகை.

1) வாயு அடுப்பு 2) மண்ணெய் அடுப்பு.
3) மின்னடுப்பு 4) பயனுள்ள விறகு அடுப்பு.

17) சூழலுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் சக்தி மூலம்.

1) காற்றுச்சக்தி 2) நிலநெய் 3) சூரியசக்தி 4) கடலலைச் சக்தி

18) சுவாசப்பைபுற்று நோய், அஸ்மா, பீனிசம் முதலான சுவாசத் தொகுதி நோய்கள் ஏற்புடுவதற்கான காரணம்.

1) நீர்ப்பற்றாக்குறை 2) நீர்மாசடைதல் 3) வளிமாசடைதல் 4) நிலம் மாசடைதல்.

19) விலங்குகளின் சுவாசத்திற்கு மிக அவசியமான வாயு.

1) ஒட்சிசன் 2) காபனீரொட்சைட் 3) நைதரசன் 4) ஐதரசன்

20) ஓடு, செங்கல் உற்பத்திகளுக்கான மூலப்பொருள்.

1) சீமெந்து 2) சிலிக்கா மண் 3) வெண்களி 4) களிமண்

(40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

*01)*

*01)* புவியியல் பாடத்தில் இரண்டாம் தவணையில் உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீடு வகை யாது? *(2 புள்ளிகள்)*

*02)* அக் கணிப்பீட்டைப் பூர்த்தி செய்த பாட அலகைக் குறிப்பிடுக? *(2 புள்ளிகள்)*

*03)* அக் கணிப்பீட்டைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் இரண்டினைத் தருக? *(2 புள்ளிகள்)*

*04)* கணிப்பீட்டைப் பூர்த்தி செய்ததன் மூலம் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் இரண்டினை எழுதுக? *(3 புள்ளிகள்)*


*05)* கணிப்பீடு தொடர்பாக உமக்கு ஆசிரியர் வழங்கிய ஆலோசனைகள் இரண்டு தருக? *(3 புள்ளிகள்)*

*02)*

*01)* உமது பாடசாலை அமைந்துள்ள பின்வரும் நிர்வாகப் பிரிவுகளைக் குறிப்பிடுக.
*01)* பிரதேச செயலர் பிரிவு :
*02)* மாவட்டம் :
*03)* மாகாணம் : *(3 புள்ளிகள்)*

*02)* வட மாகாணத்தில் உள்ளடங்கும் மூன்று மாவட்டங்களைப் பெயரிடுக. *(3 புள்ளிகள்)*

*03)* தரப்பட்ட உருவினைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.




*01)* பாடசாலைக்கு வடக்குத் திசையில் .............................. அமைந்துள்ளது.
*02)* பாடசாலைக்கு ........................ திசையில் தபாலகம் அமைந்துள்ளது.
*03)* சந்தைக்கு .................................... திசையில் பாடசாலை அமைந்துள்ளது.
*(3 புள்ளிகள்)*

*04)* உமது பாடசாலைச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சேவை நிறுவனங்கள் மூன்றை எழுதுக. *(3 புள்ளிகள்)*

*03)*

*01)* கீழே தரப்பட்டுள்ள வானிலை மூலகங்களை அளவிடப் பயன்படும் கருவிகளைப் பெயரிடுக.
*01)* மழைவீழ்ச்சி
*02)* காற்று வீசும் திசை
*03)* காற்றின் வேகம் *(03 புள்ளிகள்)*

*02)* மழைவீழ்ச்சி மூலம் எமக்குக் கிடைக்கும் மூன்று பயன்களைக் குறிப்பிடுக? *(03 புள்ளிகள்)*

*03)* வானிலை எதிர்வு கூறல்களைச் செவிமடுப்பதனால் ஏற்படும் நன்மைகளை எழுதுக. *(03 புள்ளிகள்)*

04) இலங்கையில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்கள் மூன்றைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

04)

01) பின்வரும் பயன்களை வழங்குகின்ற விலங்குகளைப் பெயரிடுக.
 01) கழிவுப் பொருட்களை உக்கச் செய்தல்.
 02) பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழித்தல்.
 03) மகரந்த சேர்க்கைக்கு உதவுதல். (03 புள்ளிகள்)

02) தாவரங்களிலிருந்து சுற்றாடலுக்குக் கிடைக்கக் கூடிய மூன்று பயன்பாடுகளைத் தருக? (03 புள்ளிகள்)

03) இலங்கையில் வாழும் பின்வரும் மதத்தவர் கொண்டாடும் பண்டிகைகள் இவ்விரண்டு எழுதுக.
 01) பௌத்தர் :
 02) இந்துக்கள் :
 03) கிறிஸ்தவர் : (03 புள்ளிகள்)

04) பிரதேச மக்கள் ஒன்றிணைந்து கூட்டாகச் செயற்படும் மூன்று நிகழ்வுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

05)

01) இலங்கையில் பின்வரும் பாரம்பரியக் கைத்தொழில்களுக்குப் பிரசித்தமான இடங்களைப் பெயரிடுக.
 01) பித்தளைப் பொருட்கள் :
 02) முகமூடி :
 03) ஓடு, செங்கல் : (03 புள்ளிகள்)

02) நாம் நீரைப் பயன்படுத்துகின்ற பல்வேறு சந்தர்ப்பங்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

03) பாடசாலையில் நீர் வளம் விரயமாகும் மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

04) வளி மாசடைதலுக்கான காரணங்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

06)

01) பின்வரும் சக்தி வளங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்று குறிப்பிடுக
 01) மின்சாரம் :
 02) விறகு :
 03) நிலநெய் : (03 புள்ளிகள்)

02) சக்தி வளங்களுக்கான கேள்வி அதிகரித்துச் செல்வதற்கான காரணங்கள் மூன்று எழுதுக.(03 புள்ளிகள்)

03) சக்தி மூலகங்களின் பயன்பாட்டின் போது சக்தி விரயமாகும் மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

04) வீட்டில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தைச் சேமிப்பதற்குப் பின்பற்றக் கூடிய வழிமுறைகள் மூன்று எழுதுக. *(03 புள்ளிகள்)*